
# அறநெறி அமுதம்

ஆன்மீக விழுமியக் காலாண்டிதழ் – 51   ஆடி – புரட்டாதி 2013

சுவாமி விவேகானந்தரின் 150ஆவது பிறந்த ஆண்டு



இராமகிருஷ்ண மிஷன் சமய பாடசாலை
40, இராமகிருஷ்ண வீதி, கொழும்பு – 06

அமுதம் 13   துளி 3




இளமையும் வலிமையும் வளமையும் அறிவுக் கூர்மையும் உடையவர்களே இறைவனை அடையக் கூடியவர்கள் என்று வேதங்கள் முழங்குகின்றன. உங்களுடைய எதிர்காலத்தை நிர்ணயித்துக் கொள்ளுங்கள். இதுவே அதற்கு ஏற்ற தருணம். ஆற்றல் மிக்க இளமைப் பருவத்தைப் பெற்றுள்ள உங்களுக்கு இந்த இளமைக்காலமே பொன்னான நேரமாகும். இது வலுவிழந்து, தேய்ந்து, மாய்ந்து, இளமைத்துடிப்பு அறவே ஓய்ந்து தளர்ந்து கிடக்கும் முதுமைக் காலமல்ல. வாலிபத்தின் வளமையும் புத்துணர்ச்சியும் மிக்க இளமைக் காலமே உழைப்பதற்கு உகந்த காலமாகும். உழைப்பு. ஆம், அதற்கு இதுவே பொன்னான தருணம் ஆகும்.

இளைஞர்களே! எழுந்திருங்கள்! விழித்திருங்கள்! உலகம் உங்களை இரு கை நீட்டி அழைக்கிறது. ஊக்கம் உங்கள் இரத்தத்தில் கிளர்ந்தெழ எழுவீர்களாக! ஏழை என்றோ, நண்பர்கள் இல்லை என்றோ நினைத்து வருந்த வேண்டாம். அந்தோ! பணமா மனிதனைப் படைக்கிறது? இதுவரை யாராவது அப்படிக் கேட்டதுண்டா? மனிதன் அல்லவா செல்வத்தை ஆக்குகிறான்? இந்த உலகம் அனைத்தையும் மனித சக்தியே உருவாக்கியது. நம்பிக்கை என்ற வலிமையினால் உருவாக்கியிருக்கிறது.



எழுந்திருங்கள்! விழித்திருங்கள்! நமது தாய்த்திரு நாடு இந்த மகத்தான தியாகத்தை வேண்டி நிற்கிறது. இந்த மகத்தான பணி இளைஞர்களே செய்யக்கூடிய பணி. இளமை, ஆற்றல், வலிமை, கட்டுடல், அறிவுக் கூர்மை உடையவர்களுக்கே - இளையவர்களுக்கே உரியது இந்தப் பணி. நம் நாட்டில் நூற்றுக்கணக்கில், ஆயிரக்கணக்கில் இத்தகைய இளைஞர்கள் இருக்கிறார்கள்.

***– சுவாமி விவேகானந்தர்***

# பிரார்த்தனை



✻ ✻ ✻ ✻ ✻ ✻ ✻ ✻ ✻ ✻ ✻ ✻ ✻

விவேகஜானந்த நமக்ன சித்தம்
விவேக தானைக விநோத சீலம்
விவேக பாஸா கமனீய காந்தம்
விவேகினம் தம் ஸததம் நமாமி

*-விவேகானந்தர் துதி*

**பொருள்:** விவேகத்திலிருந்து தோன்றிய ஆனந்தத்தில் மூழ்கிய சித்தத்தை உடையவரும் பிறருக்கு விவேகத்தை அளிப்பதான அதிசய குணத்தைக் கொண்டவரும் விவேகம் தரும் ஒளியால் விளைகின்ற பேரழகை அணிந்தவருமான விவேகானந்தரை நான் எப்போதும் வணங்குகிறேன்.

தாயினும் கனிந்த உள்ளம் தளர்விலாத் தீர வீரம்
தீயினைப் போன்ற தூய்மை தென்றலைப் போன்ற தண்மை
மாயையும் அஞ்சும் ஞானம் மன்மதன் போன்ற மேனி
ஆயவை பொருந்தும் அண்ணல் விவேகானந்தர் போற்றி!

**இராமகிருஷ்ண மிஷன் சமய பாடசாலை.**
**40, இராமகிருஷ்ண வீதி, கொழும்பு 06.**

**அமுதம் 13** **துளி 3**

## இந்த இதழில்...


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | பிரார்த்தனை | 1 |
| 2. | இதழாசிரியர்களிடமிருந்து... | 3 |
| 3. | பண்பு வளர்ந்திடல் வேண்டும் - கவிதை | 4 |
| 4. | பேசும் குகை - பஞ்சதந்திரக் கதை | 5 |
| 5. | இன்றைய வழிபாடு - கேட்டுச் சுவைத்தவை | 6 |
| 6. | நன்றி கெட்ட மான் - பாப்பா பாப்பா கதை கேளு | 8 |
| 7. | கலியுக கற்பகதரு | 9 |
| 8. | ஆளுமை விருத்தி | 12 |
| 9. | நாம் அனைவரும் சகோதரர்களே - படக்கதை | 14 |
| 10. | முண்டக உபநிடதம் | 17 |
| 11. | கலியுகக் கர்ணன் - சாதனையாளர் | 19 |
| 12. | மனதில் தோன்றும் எண்ணங்கள் - படித்துச் சுவைத்தவை | 22 |
| 13. | புண்ணிய நதிகள் | 23 |
| 14. | நின்னைச் சரணடைந்தேன் - கவிதை | 26 |
| 15. | துருவன் - புராணச் சிறுவர் | 27 |
| 16. | யோகம் | 30 |
| 17. | கடந்த இதழின் குறுக்கெழுத்துப் போட்டி விடைகள் | 32 |
| 18. | திருப்தி - கதை | 33 |
| 19. | குறுக்கெழுத்துப் போட்டி | 35 |
| 20. | கடினமான செயல் - கதை | 36 |
| 21. | சர்வதேசத்தில் சுவாமி விவேகானந்தரின் 150ஆவது பிறந்த ஆண்டு சிறப்பு நிகழ்ச்சிகள் | 38 |
| 22. | செய்திகள் | 40 |

**இதழாசிரியர்களிடமிருந்து...**

இவ்வுலகில் எத்தனையோ குருமார் வந்துபோய் இருக்கின்றனர். ஆனால் அவர்களில் பலரது ஜெயந்தி தினங்கள் எமக்குத் தெரியாது. எனவே அவர்கள் அனைவரது ஜெயந்தியையும் ஒருசேர வியாசரின் ஜெயந்தி தினமாகிய குருபூர்ணிமாவில் கொண்டாடுகிறோம். இம்முறை அறநெறி அமுதம் குருபூர்ணிமா தினத்தையொட்டி வெளிவருகிறது.

"ஓம் ஸஹநா வவது..." என்ற மந்திரம் பகர்வதுபோல் உயர்ந்த உண்மைகளை விளங்கப்படுத்துவதற்கும் விளங்கிக் கொள்வதற்கும் முதலில் குருவும் சீடரும் நல்ல நிலையில் இருக்க வேண்டும். அடுத்து, அவர்கள் இருவருமே உண்மை ஞானத்தை அறிவிப்பதற்கும் அறிவதற்கும் கடுமையாகப் பாடுபட வேண்டும். அத்துடன் அவர்களுக்கிடையில் அன்பு தழைத்து அந்நியோன்னியம் பெருக வேண்டும். அவ்வாறு அமையும்போது அந்தச் சீடனுக்கு உண்மை ஞானம் வாய்க்கப் பெறுவதோடு அந்த குரு-சீடர் பரம்பரையே உன்னத நிலையை அடைகிறது.

இப்படிப்பட்ட உன்னத குரு-சீடர்கள்தான் பகவான் ஸ்ரீ இராமகிருஷ்ணரும் சுவாமி விவேகானந்தரும். அளப்பரிய ஞானத்தை - பேருண்மையைக் கடுமையான சாதனைகள் மூலம் அறிந்தபின் அதனை மற்றவர்களுக்கும் போதிக்க விரும்பினார் உலக குருவான ஸ்ரீ இராமகிருஷ்ணர். "எனது சீடர்களை எப்போது என்னிடம் அனுப்பி வைப்பாய்?" என்று அன்னை காளியிடம் பிரார்த்தித்தவண்ணம் இருந்தார். நரேந்திரனோ (சுவாமி விவேகானந்தர்) "கடவுள் இருக்கிறாரா? அவரை யாரும் கண்டதுண்டா?" என்ற கேள்விகளுக்குப் பதில் சொல்லக் கூடிய குருவைத் தேடி அலைந்தார். அவருக்கு "கடவுள் இருக்கிறார். நான் அவரைக் கண்டிருக்கிறேன்; உன்னைப் பார்ப்பதைவிடத் தெளிவாகப் பார்த்திருக்கிறேன்; உன்னாலும் அவரைப் பார்க்க முடியும்" என்று உறுதியாகக் கூறினார் குருதேவர். அவ்வாறு ஆரம்பித்த குரு-சீடர் உறவு, வரலாறு காணாத அன்பு நிறைந்ததாக மிளிர்ந்தது. இதன் மூலம் உயர் ஞானத்தை அடைந்த சுவாமி விவேகானந்தர் உலகம் முழுவதுமே தான் கண்ட உண்மைகளை உபதேசித்தார்.

அப்படிப்பட்ட குருவும் சீடரும் போதித்த விடயங்களைத் தாங்கி வெளிவரும் அறநெறி அமுதத்தின் இச் சிறு துளியை அந்த அற்புத குரு ஸ்ரீ இராமகிருஷ்ணரின் பாதங்களில் சமர்ப்பிக்கிறோம்.

ஆக்கம்: அ. ஹரீசன்

# பண்பு வளர்ந்திடல் வேண்டும்!

கண்கள் இரண்டுள என்று - குறைக்
காட்சி கண்டிட லாமோ? அட!
புண்ணை மறைத்திடல் வேண்டி- ரோஜாப்
பூவைப் பறித்திட லாமோ?

கங்கைக் கரையினில் நின்று - ஒரு
கிணறு தோண்டிடலாமோ? - பெருந்
தங்கக் குவியலைக் கண்டும் - சிறு
கல்லைப் பொறுக்குதல் ஏனோ?

மாயக் கடலினைத் தாண்டி - என்றும்
வீசுது தெய்வத்தின் காற்று! அட
பாயை மட்டும் விரைந் தேற்று!- ஒரு
பாதை புரிந்திடப் போற்று!

எண்ணம் உயர்வுள தாயின் - தெய்வம்
எங்கும் உறைவதைக் காண்பீர்!- 'எந்தன்
கிண்ணத்தில் மட்டுமே உண்டு'- என்ற
கீழ்மை தவிர்த்திடல் வேண்டும்!

சொந்தச் சுயநலம் தேடித் - துயர்
சூழ மடிந்தவர் கோடி! - என்று
சிந்தை தெளிந்துவா! ஆடி! - அன்புத்
தெய்வத் திருப்பதம் நாடி!

ஏழை படும்துயர் கண்டும் - நாம்
இன்னும் அமைதியாய்ச் சென்றால்
நாளை நமக்கது நேரும்! - அதை
நீக்கப் புறப்பட்டு வாரும்!

பண்பு வளர்ந்திடல் வேண்டும்! - பல
வீனம் விலகிடல் வேண்டும்! - அட!
அன்பு நிறைந்திடல் வேண்டும்! - அது
இன்றே நடந்திடல் வேண்டும்!










## பஞ்சதந்திரக் கதை

அன்றொருநாள், காடு முழுவதும் அலைந்து திரிந்தும் ஒரு விலங்குகூடத் தீனியாகக் கிடைக்கவில்லை அந்தச் சிங்கத்திற்கு. மிகுந்த பசியில் களைத்துப் போன அந்தச் சிங்கம் வழியிலிருந்த ஒரு குகையைக் கண்டது. 'இதனுள்ளே சென்று ஒளிந்து கொள்வோம். இரவு நேரத்திலேனும் குகைக்கு ஏதாவது விலங்கு வராமலா போகும்' என்று எண்ணியவாறே குகைக்குள் சென்று ஓய்வெடுத்தது அந்தச் சிங்கம்.




அந்தக் குகையில் ஒரு நரி வசித்து வந்தது. வெளியே சென்றிருந்த நரி மாலையில் திரும்பி வந்து வாயிலில் நின்று கொண்டு, "குகையே! குகையே!" என்று ஊளையிட்டது. சற்றுநேரம் கழித்து, "ஏ குகையே! தினமும் என்னுடன் பேசுவாயே. இன்றைக்கு ஏன் என்னுடன் பேச மாட்டேன் என்கிறாய்? சரி! நீ என்னுடன் பேச மாட்டாய் அல்லவா? அதனால் என்னோடு பேசக்கூடிய வேறு குகைக்குப் போகிறேன் நான்" என்று சொல்லியது.

இதைக்கேட்ட சிங்கம், 'இந்தக் குகை, நரியுடன் தினமும் பேசும் போல் தெரிகிறதே. நான் இருப்பதால் பேசப் பயப்படுகிறது போலும். குகை பேசாவிட்டால் நரி சென்று விடுமே! ஆகையால் அதற்குப் பதிலாக நாம் பேசுவோம். அதைக் கேட்டு நரி உள்ளே வந்தால் எனக்கும் உணவு கிடைக்குமே!" என எண்ணியது.



(தொடர்ச்சி 7ஆம் பக்கத்தில்...)

ஆக்கம்: வெ. கஜானன்

## கேட்டுச் சுவைத்தவை

*இந்தியாவிலிருந்து வருகை தந்த ஸ்ரீமத் சுவாமி ஆத்மகனானந்தஜி மஹராஜ் 13.06.2013 அன்று கொழும்பு இராமகிருஷ்ண மிஷனில் இளைஞர்களுக்கு ஆற்றிய உரையின் அடிப்படையில்...*

# இன்றைய வழிபாடு

இக் காலத்தில் வழிபாடு என்பதுதான் என்ன? ஒவ்வொருவர் ஒவ்வொரு விதமாக விளக்கமளிக்கின்றார்கள். ஒரு சாரார் கோவிலுக்குச் செல் என்கின்றார்கள், மறுசாரார் வீட்டிலிருந்து வழிபடு என்கிறார்கள், இன்னும் ஒரு சிலரோ நம்மிடம் வாருங்கள் விடுதலை உண்டென்கிறார்கள். நாம் எந்தப் பக்கம் சாய்வது?



சுவாமி விவேகானந்தர் சொல்கின்றார், இக் காலத்தில் வழிபாடு என்பது நம்மைச் சுற்றியுள்ள உலகில், துன்பப்படுபவர்களை நேசித்துக் காப்பதே. சுவாமிஜி (சுவாமி விவேகானந்தர்) அமெரிக்காவில் நடைபெற்ற சர்வமத மகாநாட்டிற்காக அங்கு சென்றிருந்த வேளையில் அந்நாட்டின் செழிப்பைக் கண்டு வியக்காமல், ஒவ்வொரு கணமும் இக் கரையில் தன் மக்கள் படும் துன்பத்தைக் கண்ணீர் மல்க நினைத்துக் கொள்வாராம். இப்படிப்பட்ட இளகிய மனம் படைத்த சுவாமிஜி இத் துன்ப துயரங்களை நீக்கும் வழிமுறைகள் பலவற்றைக் கடிதங்களாக வரைந்ததுடன், அதில் பலவற்றைத் தாமே முன்னின்று நடாத்தியும் வைத்தார்.

இன்றைய உலகம் சுவாமிஜியை ஒரு தெய்வமாகக் காண்கிறது என்றால், அதற்கெல்லாம் அவரிடமிருந்த உயர்ந்த உள்ளமே காரணம் எனலாம். இதன் வெளிப்பாடாக "கண் காணாத கடவுளை வழிபடாதே! அவை சற்றுப் பொறுத்திருக்கட்டும், உன் கண்ணெதிரே தெரிகின்ற மனிதனை வழிபடு" என்று புரட்சிகரமாக மனிதநேயத்தை இடித்துரைத்தார்.



"மக்கள் சேவையே மகேசன் சேவை, அதுவே சிறந்த வழிபாட்டிற்குச் சமானமாகும் என்ற கருத்தை விதைத்தார் நவயுக ஞானி சுவாமி விவேகானந்தர்" என்று ஸ்ரீமத் சுவாமி ஆத்மகனானந்தஜி மஹராஜ் தனது உரையில் குறிப்பிட்டார்.

சரி, இதில் மாணவர்களாகிய நமக்கு என்ன பங்கு? நாம் உணர்ந்து கொள்ள வேண்டியது என்ன? வருகிறேன் சற்றுப் பொறுங்கள்.

மூதுரையிலே ஔவைப்பாட்டி நன்றாகச் சொல்வார்:

**"நின்று தளரா வளர் தெங்கு தாளுண்ட நீரைத்**
**தலையாலே தான் தருதலால்"** என்று.

அதாவது ஓங்கி உயர்ந்து வளர்கின்ற தென்னை மரமானது தான் வளர்வதோடு மட்டுமல்லாது, தக்க பருவத்தை அடைந்ததும் வேரினாலே தான் பருகிய தண்ணீரைத் தலையினாலே இனிய இளநீராகத் தருகின்றது. இதைப் போல் எமக்கு இலவசமாய்க் கிடைக்கின்ற கல்வியை மாசறப் பயின்று நாமும் உயர்வதோடு சமூகம் பயன்படும்படியாக நல்லவர்களாக வாழவும் வேண்டும்.

---

(5ஆம் பக்கத் தொடர்ச்சி...)



உடனே சிங்கம் உள்ளிருந்தவாறே காடே அதிரும்படி கர்ஜித்தது. நரியும் தன் சாதுரியத்தால் நேரவிருந்த ஆபத்தை அறிந்து கொண்டு அங்கிருந்து ஓடித் தப்பியது. ***ஆபத்து வருமுன்பே சமயோசிதமாக யோசித்து, எச்சரிக்கையுடன் இருப்பவர்கள் துன்பம் நேராமல் தப்பித்துக் கொள்வர்.***

தொகுப்பு: க. கலைவாணி

# பாப்பா பாப்பா கதை கேளு

## நன்றி கெட்ட மான்

காட்டில் மான் ஒன்று மேய்ந்து கொண்டிருந்தது. அந்தப் பக்கமாக வந்த இரண்டு வேடர்கள் அந்த மானைப் பார்த்துவிட்டார்கள். அதைப் பிடிப்பதற்காக விரட்டினார்கள். அவர்களிடமிருந்து தப்புவதற்காக மான் வேகமாக ஓடியது. வேடர்கள் அதைத் துரத்திக் கொண்டு பின் தொடர்ந்தார்கள். ஓடிக் கொண்டிருந்த மான் அருகில் தென்பட்ட ஒரு திராட்சைத் தோட்டத்துக்குள் புகுந்துவிட்டது. வேடர்கள் அதைத் துரத்திக் கொண்டே திராட்சைத் தோட்டத்துக்குள் புகுந்தார்கள்.

மான் அடர்ந்து வளர்ந்திருந்த ஒரு பெரிய திராட்சைக் கொடியின் பின்னால் சென்று மறைந்து கொண்டது. மானைத் துரத்திக் கொண்டு வந்த வேடர்கள் மானை அங்குமிங்கும் தேடினார்கள். ஆனால் அவர்கள் கண்களில் மான் தென்படவில்லை. வேடர்கள் மானைத் தேடிக் கொண்டு தோட்டத்தின் உள்ளே சுற்றிச் சுற்றி வந்தார்கள்.

வேடர்கள் போய்விட்டார்கள் என்று கருதிய மான் நிம்மதியடைந்தது. அதன் கண்களிலே பசுமையான திராட்சை இலைகள் தென்பட்டன. தான் மறைந்திருக்க உதவிய அந்த இலைகளைப் பற்றி அது எண்ணிப்பார்க்கவில்லை. தனக்குப் பாதுகாப்பு அளித்த அந்தத் திராட்சை இலைகளின் மீது அதற்குக் கொஞ்சமும் நன்றி உணர்ச்சி ஏற்படவில்லை. அது அந்த இலைகளைத் தின்னத் தொடங்கியது.



கொஞ்ச நேரத்திற்குள் இலைகள் அனைத்தையும் மான் தின்றுவிட்டது. இப்பொழுது அந்த இடத்தில் இலையில்லால் கொடிதான் மிஞ்சியது.

(தொடர்ச்சி 11ஆம் பக்கத்தில்...)

ஆக்கம்: உ. சசிதரன்





இளம் இராஜகுமாரனான சித்தார்த்தனை உலகம் வணங்கும் புத்தனாக மாற்றியது பிணி, மூப்பு, சாவு எனும் மனித உடலில் ஏற்படும் மாற்றங்களும் வாழ்வின் நிலையாமையுமே. கதாதரனுக்கும், மனித வாழ்வின் நிலையாமை குறித்து ஆழமாய் உணர்த்தும் சம்பவமொன்று நடந்தது.

அதுதான் அவன் தந்தை சுதிராம் சட்டர்ஜியின் மறைவு. சுதிராம் சட்டர்ஜி தனது அறுபத்தெட்டாவது வயதினில் அஜீரணம் மற்றும் வயிற்றுப்போக்கினால் பாதிக்கப்பட்டு இயற்கை எய்தினார். சுதிராமின் மரணம் கதாதரனை வெகுவாகவே பாதிக்கச் செய்தது. காரணம் சுதிராம் கதாதரன் மீது பொழிந்த அன்பு. மேலும் சுதிராமின் மரணம் கதாதரனின் நடவடிக்கைகளில் மிகுந்த மாற்றத்தை ஏற்படுத்தியது. தனிமையை விரும்புபவனாகவும், மனித வாழ்வின் நிலையாமை குறித்து ஆழ்ந்து சிந்திப்பவனாகவும் மாறினான்.

இக்காலகட்டத்தில் யாத்திரை செல்லும் சாதுக்கள் காமார்புகூரின் சத்திரத்தில் தங்கியிருந்தனர். அவர்களின் வாழ்க்கை முறை கதாதரனை மிகவெகுவாகக் கவர்ந்தது. கதாதரன் அவர்கள் தங்கியிருக்கும் சத்திரத்திற்குச் சென்று வருவதை அதிகப்படுத்தினான். மேலும் அவர்களுக்கு, சமையலுக்குத் தேவையான சுள்ளிகளைச் சேகரித்துக் கொடுப்பது, நீர் சேகரித்துக் கொடுப்பது போன்ற சிறுசிறு உதவிகளைச் செய்வான். சாதுக்களும் கதாதரனுக்கு எவ்வாறு பிரார்த்தனை செய்வது, எவ்வாறு இறை சாதனைகள் செய்வது என்பது பற்றியும் கற்றுக்கொடுத்தனர்.



நாளடைவில் கதாதரன் அவர்களுடன் நீண்ட நேரத்தைச் செலவிட ஆரம்பித்தான் அவர்களுடன் உணவருந்தவும் ஆரம்பித்தான். இதனால் அவனுக்குப் பசியே இருக்காது. தாய் சந்திரமணிதேவி கேட்டால் சாதுக்களுடன் உணவருந்தியதாகச் சொல்வான். ஆரம்பத்தில் சந்திரமணிதேவிக்கு கதாதரன் சாதுக்களுடன் பழகி அவர்களின் ஆசியைப் பெறுவது நல்ல விடயமாகவே தோன்றியது.



ஆனால் சில நாட்களில் கதாதரன், வீட்டிற்கு வரும்போதெல்லாம் இருந்த தோற்றம் அவள் மனதில் பயத்தைத் தோற்றுவித்தது. சாதுக்களைப் போல் நெற்றியில் திலகமிட்டு, தான் அணிந்திருந்த துணியைக் கிழித்துக் கோவணமாகக் கட்டிக்கொண்டு உடல் முழுக்க சாம்பலைப் பூசிக்கொண்டு வந்து நிற்பான். அத்துடன் தாயிடம், 'அம்மா! அந்தச் சாதுக்கள் என்னை எப்படி அலங்கரித்திருக்கின்றார்கள்!' என்று மகிழ்ச்சி பொங்கக் கூறுவான்.

இந்த நிகழ்ச்சிகளால் சந்திரமணியின் தாயுள்ளம் வெகுவாகக் கவலையுற்றது. என்றோ ஒருநாள் கதாதரனையும் சாதுக்கள் தங்களுடன் அழைத்துச் சென்றுவிடுவார்களோ என்று ஏங்கியது மனம். பொறுக்க முடியாமல் தன் கவலையைக் கதாதரனிடம் கூறி அழுதேவிட்டாள். கதாதரனும் சந்திரமணி தேவியைத் தேற்ற முயன்றான். ஆனாலும் அவளின் பயம் அகலவில்லை. இதனால் கதாதரன் சந்திரமணிதேவியிடம், "நான் இனிமேல் சாதுக்களிடம் செல்லவில்லை" என முடிவாகக் கூறினான். இதன் பிறகே சந்திரமணிதேவியன் அச்சம் நீங்கியது. கதாதரன் அந்த சாதுக்களிடம் நடந்ததைக் கூறி விடைபெற முயன்ற போது, அந்தச் சாதுக்கள் மிகவும் கவலையுற்றனர்.

நேராக சந்திரமணிதேவியிடம் வந்து, "அம்மா! உங்களுக்குத் தெரியாமல் இவனை எங்களுடன் அழைத்துச் சென்றுவிடுவோம் என்று நினைக்கிறீர்களா? அது திருட்டுத் தனத்திற்கு ஒப்பானது அல்லவா? அப்படிப்பட்ட செயலை சாதுக்களாகிய நாங்கள் செய்வோமா?" எனக் கேட்டு, "நாங்கள் அவ்வாறு செய்யமாட்டோம்" என உறுதி கூறினார்கள். சாதுக்களின் உறுதிமொழியைக் கேட்ட பின்பு, தான் கொண்ட அச்சம் வெறும் மனக்கலக்கம் என உணர்ந்தாள் சந்திரமணிதேவி. கதாதரன் முன்போலவே சாதுக்களிடம் சென்று வர ஆரம்பித்தான்.

இவ்வாறு இச்சிறுவயதினிலேயே மனித வாழ்வின் நிலையாமை குறித்து உணர்ந்த இந்த உன்னத சிறுவனின் உத்தமத் தன்மையை விளக்கும் சம்பவத்தை அடுத்த இதழில் பார்ப்போம்.

(8ஆம் பக்கத் தொடர்ச்சி...)


அந்தத் தோட்டத்தின் உள்ளே மானைத் தேடி அலைந்து கொண்டிருந்த வேடர்கள் மான் இனிக் கிடைக்காது என்று எண்ணிக்கொண்டு தோட்டத்தைவிட்டு வெளியே செல்ல எண்ணி நடந்து வந்தார்கள். மான் நின்றிருந்த இடத்தில் இப்போது இலைகளின் மறைப்பு இல்லாததால் அது நிற்பது வேடர்களின் பார்வையில் பட்டது. வேடர்கள் மானைப் பிடித்துக் கொண்டு சென்றார்கள்.



திராட்சைக் கொடி தனக்குப் புகலிடம் அளித்ததை மறந்து அதன் இலைகளை எல்லாம் தின்று விட்டதினால்தான் மானை வேடர்கள் பிடித்துக் கொண்டு சென்றனர். நன்றி கெட்டவர்களுக்கு இம்மாதிரித் தண்டனை கிடைப்பது இயல்புதான்!

***********

ஆக்கம்: சி. ஆரணி



# இன்றைய இளைஞர்களுக்கு ஆளுமை விருத்தி

இளைஞர்களுக்குச் செல்லும் இடமெங்கும் போதிக்கப் படுவது ஆளுமையை வளர்த்துக் கொள்வது எவ்வாறு என்பதுதான்.

ஆனால், அவ்விடயம் இளைஞர்கள் மனதில் எத்தகைய மாற்றத்தை விளைவிக்கின்றது எனும் கேள்விக்கு விடையேதும் இல்லை. காரணம், இவை வெறுமனே ஆளுமை விருத்திக்குரிய அறிவை வழங்குகின்றதே ஒழிய அதனை எவ்வாறு நடைமுறை வாழ்க்கையில் பிரயோகிக்க வேண்டும் என்பதை அல்ல.

இத்தொடரின் நோக்கம், சான்றோரின் ஆளுமை விருத்தி வழிகாட்டல்கள் எவ்வாறு இன்றைய இளைஞர்களாகிய எமது வாழ்க்கையில் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்பதை ஆராய்வதே ஆகும்.


மனிதர்களிடையே ஆற்றல்கள் நிறைந்துள்ளன. அவை அவர்களிடம் உள்ளார்ந்த நிலையில் அடங்கிக் கிடக்கின்றன. தம்முள்ளே இருக்கும் ஆற்றல்களை முழுமையாக அறிந்து கொள்ளாமலேயோ அல்லது பகுதியளவிலேனும் அதனைத் தமது வாழ்க்கையில் நடைமுறைப்படுத்தாமலேயோ காலத்தைக் கழித்து வருகின்ற மனிதர்கள் பலர். ஒவ்வொரு மனிதனும் தன்னை அறிய வேண்டும்; தன்னுள்ளே காணப்படுகின்ற ஆற்றல்களை உணர வேண்டும்; அப்பொழுதுதான் வெளிப்படும், ஒவ்வொருவரினதும் அதியுயர்ந்த பெறுமானம்.

மனிதன் தன் அதியுயர்ந்த பெறுமானத்தை இழந்து விடுவானோ என்ற அச்சம் தற்காலத்தில் அதிகரித்து வருகின்றது. காரணம், எம்முள் காணப்படும் உன்னதத் தன்மையை வெளிப்படுத்துவதற்கு நாம் எவ்வித முயற்சியும் செய்யாமையே ஆகும்.



கேம்பிரிஜ் ஆங்கில அகராதியின்படி "நீ நடந்து கொள்ளும் விதம், உணரும் விதம், மற்றும் எண்ணும் விதம் உன்னுடைய ஆளுமையைக் காட்டுகின்றது. அதுவே உன்னுடைய ஆளுமை" என்று வரைவிலக்கணப் படுத்தப்பட்டுள்ளது.

தனிநபரின் ஆளுமை சிறந்த முறையில் செம்மைப் படுத்தப்பட வேண்டும். இதன் மூலமே சிறந்த சமூகத்தைக் கட்டியெழுப்ப முடியும்.



சுவாமி விவேகானந்தர் கூறுகின்றார், "**என்னுடைய இலட்சியத்தை உண்மையில் ஒரு சில வார்த்தைகளில் கூறிவிடலாம்.** அது இதுதான்:- மனித இனத்திற்கு அவர்களின் தெய்வீகத் தன்மையைப் போதிப்பதும், வாழ்க்கையின் ஒவ்வொரு இயக்கத்திலும் அந்தத் தன்மை வெளிப்படச் செய்வது எப்படி என்பதைச் சொல்வதும்தான்"



சுவாமிஜியின் மேற் கூறிய குறிக்கோளினையே ஆளுமை வளர்ச்சியின் அடிநாதமாக நாம் கொள்ளலாம். அதாவது ஒவ்வொருவரும் தன்னுள் அடங்கியிருக்கும் உன்னதத் தன்மையை அக மற்றும் புறச் செயல்களின் மூலம் வெளிக்கொணரவேண்டும்.


அதன்படி, இன்றைய இளைஞர்களாகிய நாம், எமது ஒவ்வொரு செயலிலும், எண்ணங்களிலும் எவ்வாறு ஆளுமை மிக்கவர்களாக மிளிர முடியும் என்பதை அடுத்து வரும் தொடர்களில் அறிவோம்......

கதை: சி. அபிராமி

# நாம் அனைவரும் சகோதரர்களே

படம்: ம. ஆரணி




5
சுவாமிஜி வெளியே வரும் போது அவரிடம்...
என் இனத்தைச் சேர்ந்த ஒருவர் இத்தனை புகழ் பெற்றதைக் கண்டு மகிழ்கிறேன். உங்களுடன் கை-குலுக்கும் பாக்கியம் கிடைக்குமா?
6
இதைக் கேட்ட சுவாமிஜி மகிழ்ச்சியுடன் கைகுலுக்கி...
நன்றி சகோதரா நன்றி!
7
சுவாமிஜி மற்ற நீக்ரோக்களைப் போலவே சில இடங்களில் தாழ்வாக நடத்தப்பட்டார். ஆனால் ஒருபோதும் தான் நீக்ரோ அல்ல என்று மறுத்ததில்லை.
8
ஒரு சமயம் விடுதி ஒன்றிற்குச் சென்றபோது...
நான் இங்கு தங்க விரும்புகிறேன்.
அடிமைகளுக்கு இங்கே இடமில்லை.
சுவாமிஜி ஒன்றும் சொல்லாமல் அமைதியாக வெளியேறினார்.


9
சில நாட்களில் சுவாமிஜியின் புகைப்படமும் சொற்பொழிவும் அமெரிக்க செய்தித் தாளில் வெளிவந்ததைக் கண்ட விடுதி மேலாளர்...
அடடா என்ன தவறு செய்து விட்டோம்!
10
உடனே விடுதி மேலாளர் சுவாமிஜியைக் கண்டு!
மன்னிக்கவேண்டும். உங்களை அறியாமல் பேசிவிட்டேன்.
அப்போதும் சுவாமிஜி அமைதியாகவே இருந்தார்.
11
சில நாட்களுக்குப் பின் இந்தச் சம்பவத்தை அறிந்த மேலை நாட்டுச் சீடர் ஒருவர்...
சுவாமிஜி! நீங்கள் நீக்ரோ இனத்தவர் அல்ல என்று ஏன் அப்போதே சொல்லவில்லை?
ஒருவனைக் கீழே தள்ளிவிட்டு இன்னொருவன் முன்னேறுவதா! நான் அதற்காக இந்த உலகில் பிறக்கவில்லை.
சுயநலம்
அற்றவர்களாக இருங்கள்.
கண்ணுக்குப் புலப்படும்
கடவுளான உனது
சகோதரனையே வழிபட
முடியாவிட்டால்
கண்ணுக்குப் புலப்படாத
கடவுளை எப்படி நீ
வழிபட முடியும்?

ஆக்கம்: ஜெ. காயத்திரி, தரம் 9

சென்ற இதழில் பிரசின உபநிடதத்தின் பிற்பகுதியைப் பார்த்தோம்.

# முண்டக உபநிடதம்

இவ்விதழில் முண்டக உபநிடதத்தைப்பற்றிப் படிப்போம்.

இந்த உபநிடதம் அதர்வண வேதத்தைச் சேர்ந்தது. 'முண்ட' எனும் மூலச் சொல்லிலிருந்து வந்ததே 'முண்டக' என்னும் சொல்லாகும். 'முண்டக', 'முண்ட' என்றால் நீக்குதல் என்று பொருள்படும். அதாவது 'நிழலைப் பற்றிக் கொண்டிருக்கிறாய்' என்று, நமது அறியாமையை நீக்க இந்த உபநிடதம் முயற்சி எடுக்கிறது.

ஆன்மா பற்றிய ஆன்மீக அறிவே அனைத்து அறிவுகளுக்கும் அடிப்படை. இது பரம்பரை பரம்பரையாக அறியப்பட்டு வருகிறது. தேவர்களில் முதலில் தோன்றிய பிரம்ம தேவர் ஆன்மீக அறிவைத் தனது மூத்த மகனான அதர்வனுக்கு உபதேசித்தார். அதர்வன் அங்கிரருக்கும், அங்கிரர் ஸத்யவகனுக்கும், ஸத்யவகன் அங்கிரசுக்கும் ஆன்மீக அறிவை உபதேசித்தார்கள்.

சிறந்த இல்லறத்தாரான செளனகர் அங்கிரசை முறைப்படி அணுகி, "தெய்வத்திற்கு நிகரானவரே, அனைத்திற்கும் அடிப்படையான அறிவு என்று ஏதும் உண்டா?" எனக் கேட்டார். அங்கிரசு பின்வருமாறு விடையளித்தார்.


அறிவு இரண்டு வகைப்படும். ஒன்று **சாதாரண அறிவு**. நான்கு வேதங்கள், அகராதி, உச்சரிப்பு, சடங்குகள், சோதிடம் மற்றும் பல இந்த அறிவுக்குள் அடங்குகின்றன.

மற்றைய அறிவு **உயர் அறிவு**. எந்த அறிவால் இறைவன் அடையப்படுகிறாரோ அதுவே உயர் அறிவு. அந்த இறைவன் எப்படிப்பட்டவர்? அந்த அனுபூதி எப்படிப்பட்டது? அவர் எப்படி இந்த உலகைப் படைத்தார்? போன்றவை பற்றிப் பார்ப்போம்.

இறைவன் புலன்களுக்கு அப்பாற்பட்டவர்; ஆரம்பமோ முடிவோ அற்றவர்; என்றும் இருப்பவர்; எங்கும் நிறைந்தவர்; எல்லாம் அறிபவர்.

இறைவனுக்கும் படைப்புகளுக்கும் உள்ள தொடர்பை விளக்க மூன்று உவமைகள் கூறப்பட்டுள்ளன.

◆சிலந்தியிலிருந்து வரும் வலை சிலந்தியினுள்ளேயே அடங்கியிருந்ததைப் போல, இறைவனிலிருந்து தோன்றிய அவரது படைப்பு அவரிலேயே ஒடுங்கவும் செய்கிறது.



◆பூமியிலிருந்து இயல்பாகவே செடிகொடிகள் வளர்கின்றன. பூமிக்கென்று சொந்த முயற்சியோ நோக்கமோ இல்லை.
அதுபோலவே இறைவனிலிருந்து இயல்பாகவே பிரபஞ்சம் தோன்றுகிறது. அவருக்கு, சொந்த முயற்சியோ நோக்கமோ இல்லை.



◆மனிதன் ஒரு உணர்வுப் பொருள். அவன் முயற்சி செய்யாமலே அவனது உடலிலிருந்து முடி வளர்வது போல, உணர்வுள்ள இறைவனிலிருந்து பிரபஞ்சம் தோன்றுகிறது.



இந்தப் பிரபஞ்சம் இறைவனின் தவத்தால் உருவானது. அவரது தவம் ஞானமயமானது. அவரிலிருந்தே தேவர்கள், பெயர்கள், உருவங்கள் போன்றவை தோன்றின. இறைவன் பற்றின்றி உலகைப் படைத்து இயக்குவதால்தான் உலகம் இவ்வளவு அழகாக இருக்கின்றது என்கிறார் சுவாமி விவேகானந்தர்.



*************

ஆக்கம்: அ. காயத்திரி

## சாதனையாளர்

"நமது சமுதாயத்திற்கு எந்த வகையிலாயினும் நமது பங்களிப்பை வழங்கத் தவறினோமாயின் எம்மால் நீண்ட நாட்கள் இச் சமுதாயத்தில் நிலைத்திருக்க முடியாது. சமூக நலனுக்காக ஒரு தனிநபராயினும் தன் கடமையைச் சரிவரச் செய்தால் அதுவே சமுதாயத்தில் பாரிய மாற்றத்தைக் கொண்டுவரும்." **கடமையைச் செய்; பலனை எதிர்பாராதே** என்ற கீதையின் சாராம்சத்தைத் தன் வாழ்க்கையில் கடைப்பிடித்த, இந்த மெய்யிரமாண்டின் மிகச் சிறந்த மனிதன் (Man of the Millenium) எனப் பெயர் பெற்ற திரு.கல்யாணசுந்தரம் என்பவரின் வார்த்தைகளே இவை. யார் இந்தக் கல்யாணசுந்தரம்? உலகிலுள்ள அனைவரின் தனிச் சிறப்புமிக்க சமூக சேவையாளராக உலகமே இவரை வியந்து பாராட்டக் காரணம்தான் என்ன? சேவை செய்ய வேண்டும் என்ற விடாத மனவுறுதியும் சமுதாயத்தின் மீதிருந்த அசையாத நல்லெண்ணமும் மட்டுமே இச் சேவையில் அவரை நிலைத்திருக்கச் செய்தது என்றால் வியந்து போவீர்களல்லவா?

## கலியுகக் கர்ணன்

தன்னலமில்லாச் சமூக சேவையாளரான திரு. கல்யாணசுந்தரம் நூலக விஞ்ஞானத் துறையில் (Library Science) தங்கப் பதக்கம் வென்றவர். இலக்கியம் மற்றும் வரலாற்றில் முதுமானிப் பட்டம் (MA) பெற்ற இவர் தமிழ்நாடு – தூத்துக்குடியிலுள்ள குமரகுருபரா கலைக் கல்லூரியில் நூலகப் பொறுப்பாளராக 35 வருடங்கள் சேவையாற்றியுள்ளார். இதிலென்ன வியப்பு எனக் கேட்கிறீர்களா? அந்த 35 வருடங்களும் தனது உழைப்பால் வந்த முழுச் சம்பளத்தையும் சமூக சேவைக்காக மனமகிழ்வுடன் வழங்கிய கலியுகக் கர்ணன் இவர். அவர் தனது நாளாந்த உணவு, உடைத் தேவைகளுக்காக கூலி வேலை செய்தார் என்றால், வாயடைத்துப் போகிறோம் அல்லவா?



தமது வருமானத்தில் ஒரு சிறு பகுதியை, சமுக சேவைக்காக வழங்கிய பலரைக் கண்டிருப்போம். ஆனால் தன் வாழ்நாள் முழுவதும் தன் முழுச் சம்பளத்தையும் சமூக சேவைக்கு வழங்கிய ஒருவரை இன்றுதான் நாம் அனைவரும் அறிகிறோம்.

இந்தியாவின் தலை சிறந்த நூலகர், உலகின் மிகச் சிறந்த பத்து நூலகர்களில் ஒருவர் மற்றும் உலகின் உத்தம மனிதர் எனப் பலதரப்பட்ட பெயருக்கும் புகழுக்கும் உரித்தான கல்யாணசுந்தரம் அடக்கத்தையும் எளிமையையும் தன் வாழ்வின் ஆதாரங்களாகக் கொண்டுள்ளார்.

1953ஆம் ஆண்டு தமிழ்நாடு-திருநெல்வேலி மாவட்டத்தில் பிறந்த கல்யாணசுந்தரம் தன் இளவயதிலேயே தந்தையை இழந்தார். எளிமையையே வாழ்க்கையாகவும் தன்னலமற்ற சேவையொன்றையே தனது ஒரே இலக்காகவும் கொண்ட இவரை, இவரது தாயாரே சிறு வயதுமுதல் ஏழை எளியவர்களுக்கு உதவி செய்யும் நற்பண்புடன் வளர்த்தார்.



கல்யாணசுந்தரம் அவர்கள் கல்லூரியில் கல்வி கற்கும் காலத்தில் இந்திய-சீனப் போர் மூண்டது. அதன்போது தான் அணிந்திருந்த தங்கச் சங்கிலியைப் போர் நிதிக்காக அப்போதைய முதலமைச்சர் காமராஜருக்கு வழங்கினார். அதன்போது ஆனந்த விகடன் பத்திரிகையாசிரியர், "நீயாக உழைத்து யாருக்காவது உதவி செய்யும்போது உன்னைப்பற்றி என் பத்திரிகையில் எழுதுகிறேன்" என்று கல்யாணசுந்தரத்திடம் கூறினார்.

அக்கணம்தான் கல்யாணசுந்தரத்தின் உள்ளத்தில் ஒரு மின்னல் வெட்டியது. அதனையே ஒரு சவாலாகக் கொண்டு தனது படிப்பை முடித்து நூலகராக முதன் முதலில் சேர்ந்த நாள்முதல் இளைப்பாறும்வரை தன் முழுச் சம்பளத்தையும், ஓய்வூதியத்தையும், தனது மூதாதையர் வழிவந்த சொத்துக்களையும் ஏழை எளியவர்களுக்காக வழங்கினார். எப்பொழுதும் புகழையும் பாராட்டையும் விரும்பாத ஒரு எளிமை விரும்பியாகத் திகழ்ந்தார்.

'பாலம்' என்ற பெயரில் 1990ஆம் ஆண்டளவில் சமூக சேவை நிறுவனம் ஒன்றை நிறுவி அதன் மூலம் ஏழை எளியவர்களுக்கும் பணம் படைத்த, உதவத் துடிக்கும் நல்லுள்ளங்களுக்கும் ஒரு பாலமாகவே செயற்படுகின்றார். இப் 'பாலம்' அமைப்பானது குஜராத், மஹாராஷ்டிரா பகுதிகளில் ஏற்பட்ட நிலநடுக்கத்தின்போது பல்வேறு நிதியுதவிகளை வழங்கியுள்ளது.




இளைஞர் யுவதிகளுக்கு ஓர் எடுத்துக்காட்டாக விளங்கும் கல்யாணசுந்தரம் ஒருமுறை கலைக் கல்லூரியில் காந்தியத்தைப்பற்றிப் பேசவேண்டியிருந்தது. "காந்தியத்தைப்பற்றியும் அதனோடு இழையோடியிருக்கும் எளிமையைப்பற்றியும் உரையாடவேண்டிய நான் எப்படிக் 'கதர்' தவிர்ந்த ஏனைய ஆடையில் இருக்க முடியும்?" என்று சிந்தித்த கல்யாணசுந்தரம் அன்றுமுதல் கதர் வேட்டி சட்டைக்கு மாறிக்கொண்டதோடு உபதேசத்தின்படி வாழ்ந்தும் காட்டவேண்டும் என்பதற்கு ஓர் எடுத்துக்காட்டானார். இளைஞர்கள் மத்தியில் இவர் பிரபலமானதோடு மட்டுமின்றிப் பல இளைஞர்கள் இவரது 'பாலம்' திட்டத்தோடு இணைந்தும் கொண்டனர்.

பல நீண்ட பாலத் திட்டங்களைப் 'பாலம்' நிறுவனம் தன்னகத்தே கொண்டுள்ளது. ஏழை எளியவர்களுக்கும் சமுதாயத்திற்கும் தன்னாலான உதவிகளைச் செய்யக் காத்திருக்கும் இந்தக் கல்யாணசுந்தரம், கலியுகக் கர்ணனே அல்லவா நண்பர்களே!



தன்னலமில்லாமல் உதவிசெய்யும் அந்தப் பாந்த மனப்பான்மையுடைய இளைஞர்களைத்தானே சுவாமி விவேகானந்தரும் தேடி நின்றார்! நாமும் எம்மால் இயன்றளவு தன்னலமற்ற சேவை செய்வோம் என்று உறுதி பூணுவோமாக.

ஆக்கம்: சி. சாம்பவி, தரம் 10


# மனதில் தோன்றும் எண்ணங்கள் பற்றி சுவாமி விவேகானந்தர் சொன்ன கதை



ஒரு மரத்தை வெட்டிய பின் அதன் அடிப்பாகம் மட்டும் தூணைப் போல் நின்று கொண்டிருந்தது. இருட்டில் அதை ஒரு திருடன் பார்த்தான். அவனுக்கு அது ஒரு காவல்காரனைப் போல் தோற்றமளித்தது. தன்னுடைய அன்புக்குரிய ஒருவருக்காகக் காத்திருக்கும் ஒருவனோ, அந்த மரத்தூணைத் தன் அன்பராகவே நினைத்து மனம் மயங்கினான். பிசாசுக் கதைகளைக் கேட்டுப் பயந்து போயிருந்த குழந்தை அந்த மரத்தூணைப் பிசாசாகவே எண்ணி அழ ஆரம்பித்தது. ஆனால் அங்கே இருந்தது என்னவோ ஒரு மரத்தின் அடிப்பகுதி மட்டும் தான்.



நாம் எப்படி இருக்கிறோமோ அப்படியே உலகத்தைப் பார்க்கிறோம். ஒரு அறையில் ஒரு பை நிறையத் தங்கக்காசுகள் இருந்தன. ஒரு திருடன் அந்த அறைக்குள் வந்து தங்கக்காசுகளைத் திருடினான். அதே அறையில் இருந்த ஒரு குழந்தைக்கு அங்கு பொன் திருடப்பட்டதே தெரியாது. அந்தக் குழந்தைக்குள்ளே திருடன் யாரும் இல்லை. ஆகவே அந்தக் குழந்தை வெளி உலகில் திருடன் யாரையும் காணவில்லை. அறிவும் அப்படிப்பட்டதுதான் என்கிறார் சுவாமி விவேகானந்தர்.




ஆனால் இன்று நம் சமுதாய வாழ்க்கையில் தன்னிடத்திலும் பிறரிடத்திலும் இருக்கும் நல்லவற்றைப் பற்றிய நம்பிக்கையே இல்லாமல் போய்விட்டது. இதற்கு நேர்மாறாக சுவாமி விவேகானந்தர் வாழ்நாள் முழுவதும் தன் மீது நம்பிக்கையும் பிறர் மீது நம்பிக்கையும் உலகில் நல்லது நடக்கும் என்ற நம்பிக்கையும் கொண்டிருந்தார்.

(தொடர்ச்சி 29ஆம் பக்கத்தில்...)

ஆக்கம்: சோ. பிரசோபிதா

# புண்ணிய நதிகள்



புனித நதி கங்கை - பாகம் III

பகீரதனின் இடையறாத முயற்சிகளின் பின் பல தடைகளையும் தாண்டி கங்கை பாதாளம் அடைந்த வரலாற்றைச் சென்ற இதழில் பார்த்தோம். தொடர்ந்து கங்கையின் சிறப்புகளை இவ்விதழில் காண்போம்.

வடஇந்திய பஞ்சாங்கத்தின்படி சுக்கில பட்ச தசமித் திதியே (மே, ஜூன்) ஸகரபுத்திரர்கள் நற்கதி பெற்ற புனித தினம் என்பது ஆராய்ச்சியாளர்களின் கருத்தாகும். இப் பொன்னான நாளை, “கங்காதசரா” என்று கூறி அன்றைய தினத்தில் கங்கைக் கரைகளில் திருவிழாக்கள் கோலாகலமாகக் கொண்டாடப்பட்டு வருகின்றன.

இப்புனித நதிக்கு கங்கை, ஜானவி, திரிபதாகா, விஷ்ணுபதி, அலகநந்தா, மந்தாகினி, பகீரதி, எனப் பல காரணப் பெயர்கள் உள்ளன. மும்மூர்த்திகளின் அருளால் பிறவி எடுத்து வானுலகம், பூவுலகம், பாதாள உலகம் ஆகிய மூவுலகங்களிலும் பாய்ந்து தேவர் கடன், பித்ரு கடன், மாந்தர் கடன் எனும் முக்கடன்களையும் தீர்க்கும் வழிகாட்டியாக இருப்பதால் இந்நதி “திரிபத்ரா கங்கா’ என்று அழைக்கப்படுகின்றது.



ஸ்ரீ மகாவிஷ்ணு வாமன அவதாரத்தின் போது திரிவிக்கிரமனாக உரு எடுத்து ஓர் அடியால் பூவுலகையும் இரண்டாவது அடியால் வானுலகையும் அளந்த போது அவரது கால்

விரல் நகம் பட்டு விண்ணுலகில் இருந்த கங்கை, நீராகப் பெருகி அவரது திருப்பாதத்தை அலம்பியது. இதனால் "விஷ்ணுபதி கங்கா" என்ற பெயரைப் பெற்றது.

இறைவனது சடாமுடியிலிந்து துளியாகப் புறப்பட்ட கங்கை முதன் முதலில் குபேரனின் அழகாபுரிப் பட்டினம் வழியாக ஓடிய-தால் 'அலகநந்தா' என்ற பெயரைப் பெற்றது.

பகீரதனின் பிரயத்தனத்தால் புவியை அடைந்த படியால் "பகீரதி" என்ற பெயர் பெற்றாள்.

மேலும் கங்கைக்கு தேவிஸ்ரீமதி, வீட்டுமாதா, உலகமாதா, சுபர்த்துனி, மேருசம்பவை, திரிலோசனை, சடோற்பூதை, சத்ததாரா, சுபாவாகை எனப் பல பெயர்கள் உள்ளன.

## கங்கையின் பிறப்பிடம்




கங்கையின் பிறப்பிடத்தை இதுவரை யாரும் துல்லியமாகக் கண்டிலர். கயிலை மலையிலுள்ள மானஸரோவர் என்ற ஏரியில் இருந்து வெளிப்பட்டு இமயமலை ஊடே சென்று "கோமுக்" என்ற குகை வழியாக வருகின்றது என்பர் சிலர். இக்குகையினுள் நுழைந்து அதன் உற்பத்தி ஸ்தானத்தைக் கண்டறியவோ, அக்குகையின் வாயிலை அடையவோ, எவராலும் முடியாது. பாறைகளும், இரத்தத்தை உறைய வைக்கும் கடுங்குளிரும், நதியின் பயங்கர வேகமுமே இதற்குக் காரணமாகும்.



பகீரதி நதி காணும் முதல் தலம் கங்கோத்ரியாகும். இத்தலம் "கோமுக்" இல் இருந்து 18 கி.மீ தூரமாகும். இவ்விடத்தில் பகீரதி திசை திரும்பி உத்தரி (வடக்கு) திசை நோக்கி ஓடுவதால் கங்கோத்ரி என்ற பெயர் வந்தது. இங்கு கங்கையம்மனுக்கு அழகிய கோயில் உண்டு.

இக்கோயில் 18ஆம் நூற்றாண்டில் "கோர்காஜன்ரல் அமர்-ஸிங்தாபா" என்பவரால் கட்டப்பட்டது. இங்கு பகீரதன் தவம் இயற்றியதால் அவனது சிலையைக் கொண்ட ஒரு கோயிலும் உண்டு.

இரண்டு அல்லது மூன்று ஆறுகளோ அல்லது பெருநதிகளோ சந்திக்கும் இடம் 'பிரயாகை' எனப்படும். மந்தாகினி நதி அலகநந்தாவைச் சந்திக்கும் இடம் ருத்திப் பிரயாகை எனப்படும். கோமுக் குகையில் இருந்து உக்கிரமாகப் புறப்பட்டு கங்கோத்ரி தலத்தைக் கடந்து செல்லும் பகீரதியும் ருத்ரப்பிரயாகையைக் கடந்து செல்லும் அலகநந்தாவும் சங்கமமாகும் இடம் தேவப் பிரயாகை ஆகும். தேவப்பிரயாகையைக் கடந்து பின்னே கங்கை என்ற பெயரைப் பெறுகின்றது.



தேவப் பிரயாகையில் தென் புலத்தாருக்குப் பிண்டதானமும் தர்ப்பணமும் செய்வது விஷேசமாகக் கருதப்படுகின்றது. கங்கை நதியின் மூலத்துவாரத்திலிருந்து முகத்துவாரம் வரை மிகப் பிரபலம் அடைந்த புண்ணிய தலங்கள் உள்ளன. அவைகளில் கங்கோத்ரி, ரிஷிகேஷம், ஹரித்துவார், பித்தோர், கன்னோஜ், கான்பூர், திரிவேணி சங்கமம், வாரணாசி, கோலான்பூர் எனும் ஹரிஹரக்ஷேத்திரம், ஸ்ரீ வைத்தியநாதம், கல்கத்தா காளிகட்டம், கஸ்காஸாகர் என்பன மிகச் சிறந்த புனிதத் தலங்களாகக் கருதப்படுகின்றன.

இப்புனித கங்கையின் சிறப்பு யாதெனில் தானம் தர்மம் செய்வதற்குரிய தர்ம தீர்த்தமாகவும் சில வர்க்கத்தினருக்கே உரிய அர்த்த தீர்த்தமாகவும் வாழ்க்கைக்கு இன்பமூட்டும் காமதீர்த்தமாகவும் அறிவு வளர்ச்சிக்கும், ஆன்ம ஞானத்திற்கும், வீடு பேற்றுக்கும் வழிகாட்டும் மோக்ஷ தீர்த்தமாகவும் விளங்குவது தான். இப்புனித கங்கைக்கு மட்டுமே இந்நால்வகைச் சிறப்புகளும் உண்டு.

*****

ஆக்கம்: ச. துளக்சன்

# நின்னைச் சரணடைந்தேன்



அன்பினால் அணைத்திடும் கனிந்த விழியில்
அகிலங்கள் அனைத்துமே அடங்கித் துயிலும்!
அமைதியாய் அமர்ந்திட்ட ஆனந்த எழிலில்
அழகற்று அகல்கிறது அடர்ந்த மயிலும்!

உயிர்தனை உருக்கிடும் உந்தன் உருவை,
உள்ளமும் ஒருங்கே நினைந்து உருகும்!
உன்னத ஒளியே உந்தன் அருகில்,
உணர்வற்று உனதன்பில் நனைந்து பருகும்!

உறவுகள் உலகிலே உள்ள போதும்
உள்ளமும் வெறுமையில் வேகுதம்மா...!
உனதாக நான் இங்கு ஆனபோது,
உலகிங்கு எனதாக ஆகுதம்மா...!

தேயாத அன்பினில் தோய நானும்
சேயாக நின்மடியை அடையும் தருணம்!
ஓயாத அருள்வேகம் பாய நாளும்
தாயே! நின்னடியை அடைந்தேன் சரணம்!

ஆக்கம்: கு. சனாதனி, தரம் 10

## புராணச் சிறுவர்

உத்தானபாதர் என்ற மன்னருக்கு 'ஸூருசி' மற்றும் 'ஸூநிதி' என இரு மனைவியர் இருந்தனர். ஸூருசிக்கு 'உத்தமன்' என்னும் மகனும் ஸூநிதிக்கு 'துருவன்' என்னும் மகனும் இருந்தனர். ஆனால் இந்த மன்னன், ஸூருசிமீதும் உத்தமன்மீதுமே அதிக பாசம் கொண்டிருந்தான்.

ஒரு நாள் மன்னன் ஸூருசியுடன் உரையாடிக் கொண்டிருந்தான். அப்பொழுது உத்தமன், உத்தானபாதரின் மடியில் இருந்து விளையாடிக் கொண்டிருந்தான். அங்கு வந்த துருவனுக்கு உத்தமனைப்போலத் தானும் அப்பாவின் மடியில் இருக்கவேண்டும் என்று ஆசை வந்தது. எனவே உத்தானபாதரின் மடியில் அமரத் துருவன் எத்தனித்தான். அப்போது ஸூருசி துருவனைத் தடுத்து, "நீ என் வயிற்றில் பிறக்கவில்லை. எனவே அவர் மடியில் உட்கார உனக்குத் தகுதியில்லை. நீ அவர் மடியில் அமர்ந்து விளையாட வேண்டுமானால் நீ என் வயிற்றில் பிறக்கவேண்டும். எனவே காட்டிற்குப் போய் நாராயணனை நோக்கிக் கடும் தவம் செய். அவ்வாறே நீ வரம் பெற்று என் வயிற்றில் பிறந்தால் நீ அவருடன்



## துருவன்

விளையாடலாம்" என எச்சரித்து அந்தச் சிறு குழந்தையை வெளியே தள்ளி விட்டாள். மன்னன் கூட இதற்கு உடன்பாடாகவே பேசினார். இதனால் மிகவும் மனவருத்தமடைந்த துருவன் தன் தாயிடம் சென்று அழுது கொண்டே நடந்ததைக் கூறினான். அதற்கு ஸூநிதி, "நீ என் வயிற்றில் பிறந்தது துரதிஷ்டமே. உன் சித்தி கூறியபடி சென்று தவம் செய்" எனத் துருவனைச் சமாதானப்படுத்தி ஆசி கூறி அனுப்பினாள்.

துருவன் கானகம் சென்று கொண்டிருந்த போது நாரத மகரிஷி துருவனை நிறுத்தி விவரங்களை அறிந்துகொண்டார்.

அவன் கூறிய விடயங்களைக் கேட்ட நாரதர் துருவனை அரவணைத்துக் கொண்டு, "துருவா! நீ இச் சிறு வயதில் கானகத்தில் தவம் செய்வது மிகக் கடினம். சிறு குழந்தைகள் புகழ்ச்சி இகழ்ச்சி எல்லாம் நினைத்து மனம் வருந்தக்கூடாது. எனவே நீ வீடு திரும்பி நல்ல சிறுவனாக இரு" என்று அறிவுரை வழங்கினார். சிறுவனாக இருந்தாலும் துருவன் பயப்படவில்லை. அவர் கூறிய அறிவுரைக்குத் துருவன், "எல்லாம் உணர்ந்த தாங்களே இப்படிக் கூறலாமா? என் தவம் வெற்றி பெற என்னை ஆசீர்வதியுங்கள்" எனக் கூறி ஆசி பெற்றான். அவனது மனவலிமையைக் கண்டு ஆச்சரியமும் ஆனந்தமும் அடைந்த நாரத ரிஷி துருவனை நோக்கி, "குழந்தாய், ஸ்ரீமன் நாராயணனை நோக்கித் தவம் செய்யும் பொழுது **"ஓம் நமோ பகவதே வாசுதேவாய"** என்ற மந்திரத்தை ஜெபி. எல்லாத் தேவர்களும் உனக்குப் புலப்படுவார்கள். ஸ்ரீமன் நாராயணனே உன் முன் தோன்றி நீ வேண்டிய வரம் தருவார்" என்று கூறி வாழ்த்தினார்.



கானகம் சென்ற துருவன் தவம் செய்தான். மனதைக் கட்டுப்படுத்தி இதயத்தில் சங்கு சக்கர கதாயுதபாணியான ஸ்ரீமன் நாராயணனின் திரு உருவத்தை எழுந்தருளச் செய்து கடுந்தவம் செய்தான். இந்தக் கடுந்தவத்தால் முழு உலகமே ஸ்தம்பித்தது. தேவர்கள் அனைவரும் நாராயணனிடம் முறையிட்டனர். துருவனின் தவத்தை மெச்சிய ஸ்ரீமன் நாராயணன் துருவனின் முன் தோன்றினார். ஆனால் துருவனோ தவத்திலிருந்து மீளாது தன் கண்களை மூடிய வண்ணமே இருந்தான். எனவே விஷ்ணு துருவனின் மனதில் இருந்த தம் உருவத்தை மறைத்துவிட்டார். விஷ்ணுவின் உருவம் திடீரென்று மனதிலிருந்து மறைந்து விடவே, கண் விழித்த துருவன் தன் முன் நாராயணனே எழுந்தருளி இருப்பதைக் கண்டு மிக்க மகிழ்ச்சி அடைந்தான். நாராயணனை மகிழ்ச்சிப் பெருக்கால் பலவாறாகப் போற்றினான்.

நாராயணனும் துருவனை ஆசீர்வதித்து, "நீ உன் பெற்றோரிடம் செல். அவர்கள் உன்னை ஆதரிப்பார்கள். உன் தந்தையின் இராச்சியத்தை ஏற்று செங்கோலாட்சி நடத்து. உன் கடமைகள் அனைத்தும் இனிதே நிறைவுற்ற பின் அனைத்து விண்மீன்களும் சுற்றி வரும் துருவ நட்சத்திரமாகப் பல்லாயிரம் ஆண்டுகள் விண்ணில் நீ பிரகாசிப்பாய்" என்று ஆசி கூறி அருள்பாலித்தார்.



இதற்கிடையே, நாரத முனிவர் உத்தானபாதரைச் சந்திக்கச் சென்றார். மன்னர் தன்னுடைய மகனைப் பிரிந்து விட்டோமே என்ற மனவருத்தத்தில் இருந்தார். நாரத முனிவரைக் கண்டவுடன் "நீங்கள் தான் எங்கள் குறையை நீக்கவேண்டும்" என மன்றாடினார். அதற்கு நாரதர், "உங்கள் மகன் அருந்தவம் செய்துள்ளான். நீங்கள் கவலைப்படத்தேவையில்லை" என ஆறுதல் கூறினார். துருவன், நாராயணன் அருளால் அரண்மனை திரும்பிப் பெற்றோரின் ஆசி பெற்றான். சிலகாலம் சென்ற பின் தகுந்த மனைவியைக் கைப்பிடித்து உத்கலன் எனும் சிறந்த மகனையும் பெற்று நல்ல முறையில் அரசாண்டான். பூவுலக வாழ்வு முடிந்ததும் விஷ்ணுவின் வரப்படி எல்லா நட்சத்திரங்களும் சுற்றி வரும் **துருவ நட்சத்திரமாக** இன்றும் வானில் பிரகாசிக்கிறான்.

(22ஆம் பக்கத் தொடர்ச்சி...)

"முதலில் மனிதனிடம் நம்பிக்கை வையுங்கள். அவனிடம் குறைகள் இருக்குமாயின், அவன் தவறுகள் செய்தால், அவன் காட்டுமிராண்டித்தனமாக வாழ்ந்தால் அவனது உண்மையான சுபாவத்தில் இருந்து அவை தோன்றவில்லை என்றும், உயர்ந்த இலட்சியங்கள் அவனுக்கு உணர்த்தப்படாமையால்தான் இந்த இழிநிலை நேர்ந்தது என்றும் எண்ணி அவனைத் திருத்த முற்படவேண்டும்" என்றும் கூறியுள்ளார்.

எனவே ஆக்கபூர்வமான, பலம் ஊட்டும், பயனுள்ள சிந்தனைகளை மாணவப் பருவத்திலிருந்தே மனதுக்குள் புகுத்தி அவற்றை மனதில் பதித்து அதன்படி வாழப் பழகவேண்டும்.

# யோகம்

கடந்த இதழுடன் உடலைத்தளர்த்தும் பயிற்சிகள் அனைத்தும் நிறைவுற்றன. மொத்தமாக ஆறுவகையான உடற்பயிற்சிகளைப் பார்த்தோம். அவை ஒவ்வொன்றையும் ஒரே நேரத்தில் செய்வது நல்லது. அவற்றைச் செய்து முடித்த பின்னர் நன்கு ஓய்வெடுக்க வேண்டும். அதன் பிறகே ஆசனங்களைச் செய்ய வேண்டும். ஓய்விற்குச் சிறந்த ஆசனம் சவாசனம் ஆகும்.

**சவாசனம் (பிணவடிவம்)**



செய்யும்முறை: நிலத்தில் மல்லாந்து படுக்க வேண்டும். கால்களைச் சற்று அகல வைக்க வேண்டும். கைகளையும் உடம்பிலிருந்து சிறிது தூரம் தள்ளி அகல வைக்கவேண்டும். மெதுவாக உடலை இறுக்கிக்கொள்ள வேண்டும். பின்பு உடல் முழுவதையும் தளர்வாக வைத்திருக்க வேண்டும். அதன்பிறகு, காலிலிருந்து தலை வரை ஒவ்வொரு பகுதியாக மனதினுள் நினைத்து, அப் பகுதிகள் தளர்வதுபோல் உணரவேண்டும். முதலில் ஆசிரியர் ஒருவரின் உதவியுடன் செய்வது நல்லது. அவர் சொல்லச்சொல்லச் செய்து பழகியபின், நீங்களாகவே செய்வது நல்லது. இதனைச் செய்வதன் மூலம் மனம் அமைதியாகிச் சுறுசுறுப்பாக இருக்க முடியும்.

ஜோதி, உடலைத் தளர்த்தும் பயிற்சிகள் போன்றவற்றைத் தொடர்ந்து செய்யும்போது உடல் மிகவும் களைப்படையும். அதனால், நன்கு ஓய்வெடுத்த பின்பே ஆசனங்களைச் செய்ய வேண்டும். சவாசனத்தில் இருந்து ஓய்வு எடுக்கும்போது, நாம் ஒவ்வொரு பாகமாக ஓய்வாக இருப்பதை உணர்வோம். மூன்று நிமிடங்கள் வரை இந்த ஓய்விலிருப்பது சிறந்தது.

அடுத்ததாக, நாம் பார்க்க இருப்பது சூரியநமஸ்காரம், அதாவது சூரியனுக்கு வந்தனம் செய்வது ஆகும். இது ஒரு விசேடமான, மிகவும் சிறந்த பயிற்சி ஆகும்.

ஏனெனில், இப்பயிற்சியில் ஆசனங்கள், பிராணாயாமம், உடலைத் தளர்த்தும் பயிற்சிகள் போன்ற அனைத்தின் சேர்க்கைகளும் உள்ளன. இப் பயிற்சியானது, சிதிலிகரண வியாயாமம் (ஜோதி, உடலைத் தளர்த்தும் பயிற்சிகள்), ஆசனங்கள் ஆகிய இரண்டிற்கும் இடைப்பட்ட நிலையில் செய்யப்படும்.

அத்துடன், இதைச் செய்வதன் மூலம் உடம்பின் நெளிவுத்தன்மை பெருகி, ஆசனங்கள், பிராணாயாமம் செய்வதற்கு மிகவும் உகந்ததாக அமைகிறது. இதனை சூரிய உதயத்தின் போதும் சூரிய அஸ்தமனத்தின் போதும் செய்வது நல்லது. இதனைச் செய்யத் தொடங்குவதற்குமுன் கீழ்வரும் மந்திரத்தைச் சொல்லியபின் செய்ய வேண்டும்.

“ஓம் ஹிரண்மயேன பாத்ரேண

ஸத்ய ஸ்யாபிகிதம் முகம்

தத் த்வம் பூஷன்ன பாவ்ருணு

ஸத்ய தர்மாய த்ருஷ்டயே”

**பொருள்:** தங்கமயமான மூடியால், சத்தியமென்னும் பாத்திரம் மூடப்பட்டிருக்கிறது. சூரியனே! அருள்கூர்ந்து அதனைத் திறந்து உண்மை நிலைக்கு வழிகாட்டுவாயாக!

மேற்சொன்ன மந்திரத்தைச் சொல்லியபின், மேலும் பன்னிரண்டு மந்திரங்கள் உள்ளன. அவை சூரியனின் பெயர்களைக் குறித்து நிற்கின்றன. ஒரு மந்திரம் சொல்லியபின், ஒரு சுற்று (12நிலைகள்), இவ்வாறு 12 மந்திரங்களையும் சொல்லி பன்னிரண்டு தடவைகள் செய்ய வேண்டும். இல்லாவிடில் முதல் மூன்று மந்திரங்களை மட்டும் சொல்லிச் செய்யலாம்.

**அம்மந்திரங்கள் வருமாறு:**

1. ஓம் ஹ்ராம் மித்ராய நமஹ
2. ஓம் ஹ்ரீம் ரவயே நமஹ
3. ஓம் ஹ்ரும் சூர்யாய நமஹ

4. ஓம் ஹ்ரைம் பானவே நமஹ

5. ஓம் ஹ்ரௌம் கசாய நமஹ

6. ஓம் ஹ்ரஹ் பூஷ்ணே நமஹ

7. ஓம் ஹ்ராம் ஹிரண்யகர்ப்பாய நமஹ

8. ஓம் ஹ்ரீம் மரீசயே நமஹ

9. ஓம் ஹ்ரூம் ஆதித்யாய நமஹ

10. ஓம் ஹ்ரைம் ஸவித்ரே நமஹ

11. ஓம் ஹ்ரௌம் அர்க்காய நமஹ

12. ஓம் ஹ்ரஹ் பாஸ்கராய நமஹ

சூரிய நமஸ்காரத்தின் ஒவ்வொரு பகுதியும் சுவாசத்தின் சரியான போக்கை அடிப்படையாகக் கொண்டுள்ளது. அடுத்த இதழிலிருந்து சூரிய நமஸ்காரத்தின் நிலைகளைப் பார்ப்போம்....

## கடந்த இதழில் பிரசுரிக்கப்பட்ட குறுக்கெழுத்துப் போட்டிக்கான விடைகள்

பிழை திருத்தம்: இடமிருந்து வலம்

7. இறைவனிடம் தவமிருந்து பெறுவது (குழம்பி)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 ப | ல | 2 வீ | ன | ம் | |
| 3 வ | தி | ரே | | | 4 ன |
| தா | | 5 ஸ் | வ | 6 ர | ம் |
| 7 ர | 8 ம் | வ | | 9 தி | ஆ |
| 10 ணி | ம | ர | 11 தி | ந் | ச |
| | 12 ய | ன் | ம | இ | |

# திருப்தி

ஓர் ஊரில் ஒரு செல்வந்தர் இருந்தார். அவர் எந்த விடயமானாலும் அலசி ஆராய்கின்ற பழக்கம் உடையவர். ஒரு நாள் அவர் வழக்கம்போல் வெளியே உலாவிவிட்டு வீடு திரும்பும்போது ஒரு வறுமையான தொழிலாளியை வழியில் பார்த்தார். சரியான உணவு அவனுக்குக் கிடைப்பதில்லை என்பது அவனது உடலைப் பார்க்கவே தெரிந்தது. ஆனால் என்ன ஆச்சரியம்! அவனது முகத்தில் பசிக் களைப்போ சோர்வோ, எதுவும் தெரியவில்லை. சொல்லப்போனால் மகிழ்ச்சியாக இருந்தான். அவனது கலகலப்பு அந்தச் செல்வந்தரை மேலும் ஆச்சரியப்பட வைத்தது. நெருங்கி விசாரித்தார்.

செல்வந்தர்: தம்பி, இப்போது மதியமாகிறது. நீ சாப்பிடவில்லையா?

ஏழை: இல்லை. இப்போது வேலைக்குப் போகிறேன். சாப்பாடு அதன் பிறகே.

செல்வந்தர்: வேலை கிடைக்காவிட்டால்...?


ஏழை: ஏன் கிடைக்காது! கட்டாயம் தேடிக்கொள்வேன்.

அவனது நம்பிக்கையும் திருப்தியும் அவரை எதுவோ செய்தன. தன்னிடமில்லாத ஏதோ ஒன்று அவனிடம் இருப்பதாக உணர்ந்தார். அதை அறிந்துகொள்ள விரும்பி ஒரு திட்டம் வகுத்தார். "தம்பி, இன்று எனது வீட்டுக்குச் சாப்பிட வாயேன். இது எனது விருப்பம்" என்றார். அந்த ஏழையும் அவரது வேண்டுகோளைத் தட்ட மனமின்றி, சம்மதித்துச் சென்றான்.

வீட்டிற்கு வந்த செல்வந்தர், "முதலில் கை கழுவுவோம் வா" என்று, யாரோ தண்ணீர் ஊற்றுவதைப்போல் பாவனை செய்துகொண்டு தனது கையைக் கழுவுவது போல் அபிநயம் செய்தார். அந்த ஏழைத் தொழிலாளியும் அதைப் பார்த்துவிட்டுத் தானும் அதுபோலவே செய்தான். சாப்பிட அமர்ந்ததும் யாரோ உணவு போடுவதாகப் பாவனை செய்துகொண்டு செல்வந்தர் சாப்பிடலானார்.

ஏழையும் அதுபோலவே சாப்பிட்டான். இடைக்கிடையே அந்தச் செல்வந்தர், "பார்த்தாயா... வடையும் பொரியலும் எவ்வளவு பிரமாதம்! அடடா, இன்னும் கொஞ்சம் குழம்பு விடேன்!" என்றார். ஏழையும் சளைக்கவில்லை. "பாயாசம் யார் செய்தது? பிரமாதம் ஐயா!" என்று இரசித்துச் சாப்பிடுவதுபோல் நடித்து முடித்தான்.

எல்லாம் முடிந்ததும் ஏழை, "ஐயா, மிக்க நன்றி. இப்படிச் சுவையான உணவை நான் சாப்பிட்டதே இல்லை" என்று கூறியவாறு புறப்பட ஆயத்தமானான். செல்வந்தருக்கோ வியப்புத் தாங்க முடியவில்லை. ஏனென்றால் அந்த ஏழையின் முகத்தில் உண்மையிலேயே சாப்பிட்டது போல அப்படியொரு திருப்தி!



செல்வந்தர் கூறினார், "தம்பி, என்னை மன்னித்துவிடு. உன் திருப்தியின் அளவைச் சோதிக்கத்தான் இப்படி நடித்தேன். எந்த நிலையிலும் பரம திருப்தியுடன் வாழ முடிந்தவன் நீ. எந்த ஞானிக்கும்கூடக் கிட்டாத பேறு இது" என்று தழுதழுத்த குரலில் கூறிவிட்டு வேலைக்காரர்களை அழைத்தார். உண்மையிலேயே அறுசுவையோடு உணவு தந்து உண்ண வைத்தார்.

"தினமும் வருகிறாயா?" என்று அன்போடு கேட்டார். "தினமுமா? வேண்டாம் ஐயா. இப்படி உண்ணப் பழகிவிட்டால் பிறகு வாழ்நாள் முழுவதும் இதைத் தேடி இங்கே வரவேண்டியிருக்கும். மன்னியுங்கள். நன்றி ஐயா" எனக் கூறிவிட்டுப் புறப்பட்டான் அந்த ஏழைத் தொழிலாளி.

தன்னிடமில்லாத ஒன்றைக் கற்றுக்கொண்டார் அந்தச் செல்வந்தர். அதுதான்... திருப்தி.

- ஆக்கம்:- வ. வானதி -

# குறுக்கெழுத்துப் போட்டி

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | | 5 |
| 6 | | | | ■ | |
| | ■ | 7 | | | |
| | ■ | | ■ | ■ | |
| | ■ | ■ | 8 | 9 | |
| 10 | | | | | ■ |

*விடைகள் அடுத்த இதழில்...*

<u>இடமிருந்து வலம்</u>

1. குருபூர்ணிமா இவரது பிறந்த தினமாக அனுஷ்டிக்கப்படுகிறது
6. இந்திரனால் அழிக்கப்பட்ட நாக அசுரன்- _____சுரன் (வலமிருந்து இடம்)
7. ஆலயத்தின் அடையாளமாகக் கூறப்படும் மூன்று காரணிகளுள் ஒன்று(வலமிருந்து இடம்)
8. பதினைந்து திதிகளுள் இரண்டாவது (குழம்பி)
10. இதிகாசங்களுள் ஒன்று (வலமிருந்து இடம்)

<u>மேலிருந்து கீழ்</u>

1. திருநாவுக்கரசரால் பதிகம் பாடப்பெற்ற தலம் திருமறைக்காடு. அதன் தற்போதைய பெயர்
2. 'நீயே அது' என்ற மகாவாக்கியத்தின் சமஸ்கிருத வடிவம் '_____வமஸி'
3. பஞ்ச பூதங்களில் ஒன்று (குழம்பி)
4. தானங்களில் சிறந்தது எனக் கூறப்படுவது (குழம்பி)
5. பத்தாம் திருமுறையை அருளியவர் (தலைகீழ்)
8. மும்மலங்களில் மூன்றாவது (தலைகீழ்)
9. அன்னை சாரதைக்குத் தொல்லைகள் கொடுத்தாலும் அவரால் அன்பாக வளர்க்கப்பட்ட பிள்ளை - அன்னையின் தம்பியின் மகள்(தலைகீழ்)

ஆக்கம்: G. பிரதிக்ஷா, தரம் 12, கொ/இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி

# கடினமான செயல்




ஓர் ஊரில் முரட்டுச் சிறுவன் ஒருவன் இருந்தான். அவனுக்கு முன்கோபம் அதிகமாக இருந்தது. அவன் வெளியே சென்றால் போதும். யாருடனாவது சண்டை போடாமல் வீடு திரும்ப மாட்டான்.

ஒரு நாள் அந்த வீட்டுக்குப் பெரியவர் ஒருவர் வந்தார். அவரிடம் அச்சிறுவனது பெற்றோர், அவனது முரட்டுத்தனத்தைப்பற்றிச் சொன்னார்கள். அப்பொழுது அவனும் யாருடனோ சண்டை போட்டுவிட்டுக் கிழிந்த சட்டையுடன் வந்தான். அவனை அன்புடன் அழைத்த பெரியவர், "நான் ஒரு கேள்வி கேட்கிறேன், பதில் சொல்கிறாயா?" என்று கேட்டார். "சொல்கிறேன்" என்றான். "உன்னைப்போல் வலிமையான பையன் பிறர் கூறும் கேலிகளைப் பொறுத்துக் கொள்வானா அல்லது பதிலுக்குக் கிண்டல் செய்வானா? பிறர் தன்னை அடித்தால் அவர்களைத் திருப்பி அடிப்பான்னா அல்லது அமைதியாக வந்து விடுவானா?" என்று அந்தப் பெரியவர் கேட்டார். "இது என்ன கேள்வி! வலிமை உடையவன் பிறர் ஒரு திட்டுத் திட்டினால் பதிலுக்குப் பத்துத் திட்டுத் திட்டுவான். ஒரு அடி அடித்தால் பத்து அடி திருப்பி அடிப்பான்" என்றான் சிறுவன்.



"கேலிக்குக் கேலி பேசுவதும் அடிக்குப் பதிலடி தருவதும் கடினமான செயலா? அல்லது அந்தச் சூழலில் பொறுமை-யாக இருப்பது கடினமா? என்று கேட்டார் பெரியவர். "பொறுமையாக இருப்பதுதான் கடினமான செயல்" என்று தயக்கத்துடன் சொன்னான் சிறுவன். அதற்குப் பெரியவர், "உன்னைப்போன்ற வலிமை உடையவர்கள் கடினமான செயல்தானே செய்ய வேண்டும்! அப்பொழுதுதானே பெருமை பெற முடியும்! இனி யாராவது உன்னை அடித்தாலோ கேலி செய்தாலோ பொறுமையைக் கடைப்பிடி.



அப்படிப்பட்ட சந்தர்ப்பம் நேர்ந்தால் அந்தச் சூழலைவிட்டு விலகி வேறெங்காவது சென்றுவிடு. அது கோழைத்தனமல்ல. அதுதான் **பொறுமை"** என்று அறிவுரை சொன்னார்.

சில மாதங்கள் கழித்து மீண்டும் அவர் அந்த வீட்டுக்கு வந்தார். அவரை மகிழ்ச்சியுடன் வரவேற்றான் சிறுவன். "ஐயா, நீங்கள் சொன்னபடியே அந்தக் கடினமான செயலைச் செய்துவருகிறேன். யார் என்னைக் கேலி செய்தாலும் அடித்தாலும் பொறுத்துக்கொள்கிறேன். இப்பொழுது எல்லோரும் என்னை மதிக்கின்றனர். பெரியவர்கள் பாராட்டுகின்றனர்" என்று மகிழ்ச்சியுடன் பெருமை பொங்கச் சொன்னான்.



**பொறுமையைக் கடைப்பிடித்தால் வாழ்வில் வெற்றி நிச்சயம்!**

---

**நீங்களும் எழுதலாம்......**

*அறநெறி அமுதத்தில் நீங்களும் எழுத விரும்புகிறீர்களா? அப்படியாயின் நீங்கள் செய்ய வேண்டியது இதுதான்:*

மாணவர்களின் பண்பு வளர்ச்சிக்கும் ஆளுமை விருத்திக்கும் பயன்படக் கூடிய

1. கதை
2. கட்டுரை
3. படித்துச் சுவைத்தவை
4. கேட்டுச் சுவைத்தவை
5. உண்மைச் சம்பவங்கள்

ஆகியவற்றை எழுதி "அறநெறி அமுதம்" எனக் குறிப்பிட்டு முன் அட்டையில் உள்ள முகவரிக்கு அனுப்பவும். பொருத்தமான ஆக்கங்கள் உரிய திருத்தங்களுடன் பிரசுரிக்கப்படும். ஆக்கத்தை அனுப்பும்போது உங்களைப் பற்றிய விபரத்தையும் எழுதி அனுப்புங்கள். இதழாசிரியர்களின் முடிவே இறுதியானது.

தொகுப்பு : பா. ஜெனனி

## சர்வதேசத்தில் சுவாமி விவேகானந்தரின் 150ஆவது பிறந்த ஆண்டு சிறப்பு நிகழ்ச்சிகள்

(கடந்த இதழின் தொடர்ச்சி...)

இந்தியா-கல்கத்தா நாணயக்குற்றி வெளியீட்டு ஆணையகம்






சுவாமிஜியின் (சுவாமி விவேகானந்தரின்) முகப்பிரதி பொறிக்கப்பட்ட 150 ரூபா, 5 ரூபா, பெறுமதியான நாணயக் குற்றிகளை வெளியிட்டது.

2013, ஜனவரி 12 அன்று சுவாமிஜியின் 150ஆவது பிறந்த நாளை ஒட்டி இந்திய தபால் திணைக்களம் சுவாமி விவேகானந்தரின் படத்தைக் கொண்ட நான்கு புதிய தபால் தலைகளை வெளியிட்டது. அவற்றில் மூன்று 5 ரூபா பெறுமதியும், ஒன்று 20 ரூபா பெறுமதியும் உடையவை.



சுவாமிஜிக்கு தம் வணக்கத்தைச் செலுத்தும் வகையில் வடோடரா அமைப்பைச் சேர்ந்த சிறுவர்களால் (Vadodara kids) ஒரு உலக சாதனை சுவாமிஜியின் பிறந்த தினத்தன்று நிகழ்த்தப் பட்டது. சுமார் 1500க்கு மேற்பட்ட மாணவர்கள் சேர்ந்து 186 அடி நீளமும் 54 அடி அகலமும் கொண்ட ஒரு ஒளிச்சுடர் வடிவில் 8 நிமிடங்கள் நின்று சாதனை புரிந்தனர். இச் சாதனை கின்னஸ் குழுவினரின் முன்னிலையில் இடம்பெற்றது.





கல்கத்தாவில் ஜனவரி 12, 2013 அன்று இராமகிருஷ்ண மிஷனால் ஒரு நடமாடும் ஒப்பனைக் காட்சி ஊர்தி (Tableau) மூலம் "ஷாஷ்வதா பாரத்" (Shashwata Bharat) எனும் தலைப்பில் ஒரு நாடகம் நகரின் தெருக்கள் முழுவதும் காண்பிக்கப்பட்டது. இது சுவாமி விவேகானந்தரின் ஆன்மீக மற்றும் கலாசார ரீதியான கருத்துக்களை மேற்கு வங்கம் முழுவதும் பரப்பும் ஒரு நிகழ்வாகக் கருதப்பட்டது.





சுவாமி விவேகானந்தரின் 150ஆவது பிறந்த தினக் கொண்டாட்டங்களின் சிறப்பு நிகழ்வுகளில் ஒன்றாக இளைஞர்களைத் தட்டியெழுப்பும் ஒரு போட்டி நிகழ்வு வலைத்தளங்களில் (online) நேரடியாக நிகழ்த்தப்பட்டது. "வருங்காலத் தலைவர்களுக்கான தேடல்" எனும் தலைப்பில் கல்லூரி மாணவர்களிடம் நடாத்தப்பட்ட இப்போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு ஜனவரி 12, 2013 அன்று பரிசுகள் வழங்கப்பட்டன.



இப்போட்டி நிகழ்வை 'Awaking India' என்ற அமைப்பு நடாத்தியது. அத்துடன் சிறுவர்களை விழிப்பூட்டும் ஒரு நிகழ்வாக தலைமைத்துவ பயிற்சிப் பட்டறை ஒன்றும் 500 மாணவர்களைக் கொண்டு நடாத்தப்பட்டது.

இந்திய தேசிய வடிவமைப்பு நிறுவனம் சுவாமி விவேகானந்தரின் போதனைகளை வைத்து பல்லூடக அருங்காட்சியகம் ஒன்றை ஆரம்பிக்கவுள்ளது. அது வெகு விரைவில் திறக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## செய்திகள்




28.04.2013 அன்று அறநெறி அமுதத்தின் 13ஆவது அமுதத்தின் 2ஆவது துளி இரத்மலானை இந்துக்கல்லூரி அதிபர் திரு S. ஜெயக்குமார் அவர்களால் வெளியிட்டு வைக்கப்பட்டது.


ஏப்ரல் 14ஆம் திகதி சித்திரைப் புத்தாண்டு எமது ஆச்சிரமத்தில் கொண்டாடப்பட்டது. அன்றைய தினம் காலையிலும் மாலையிலும் பஜனை, ஆரதி என்பன இடம்பெற்றன.




ஏப்ரல் 19ஆம் திகதி தசரத மைந்தன் ஸ்ரீ இராம பிரானின் ஜனன தினமாகிய இராம நவமி எமது ஆச்சிரமத்தில் பஜனை மற்றும் ஆரதி நிகழ்வுகளுடன் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. 21ஆம் திகதி எமது சமய பாடசாலை மாணவர்களால் பேச்சு, பஜனை, நடனம் ஆகிய கலை நிகழ்ச்சிகளுடன் கொண்டாடப்பட்டது.




ஸ்ரீ இராமானுஜரதும் ஸ்ரீ சங்கராச்சாரியாரதும் ஜெயந்தி தினங்கள் முறையே மே 14, 15ஆம் திகதிகளில் ஆச்சிரமத்தில் அனுஷ்டிக்கப்பட்டன.

மே 24ஆம் திகதி கௌதம புத்தரின் பிறந்த, ஞானம் பெற்ற, சமாதியடைந்த தினமாகிய வெசாக் தினம் எமது ஆச்சிரமத்தில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. அன்றைய தினம் வருகை தந்த வணக்கத்துக்குரிய கலாநிதி மெதவாச்சிய தம்மஜோதி தேரர் அவர்கள் சிறப்புரை நிகழ்த்தினார். 25ஆம் திகதி எமது சமய பாடசாலை மாணவர்களால் பேச்சு, பஜனை, நடனம், நாடகம் போன்ற கலை நிகழ்ச்சிகளுடன் புத்த ஜெயந்தி கொண்டாடப்பட்டது.



உலகில் உள்ள அனைத்து குருமாரையும் நினைவுகூரும் வகையில் வியாசரின் ஜெயந்தி தினமாகிய குருபூர்ணிமா ஜூலை 22ஆம் திகதி அனுஷ்டிக்கப்பட்டது. பூஜை, பஜனை, அர்ச்சனை, யாகம், ஆன்மீகச் சொற்பொழிவுகளில் பல பக்தர்கள் கலந்து பயன் பெற்றனர்.



# படம் தரும் பாடம்

நான் இந்தப் படத்தை இணையம் மூலம் காணப்பெற்றேன். இந்தப் படம் எனது மனத்தைத் தாக்கியது. இது எனது மனிதநேயப் பண்புகளைச் செம்மைப் படுத்த உதவியது. உதவியற்ற இருவரும் நடக்கமுடியாமல் தண்ணீர்த் தாகத்தால் தவித்துக் கொண்டிருப்பதைக் கண்ட சிறுமி, தனது தேவைக்காகக் கொண்டுவந்த நீரை அவர்கள் இருவருக்கும் வேண்டியளவு பருகக் கொடுத்துத் தாகத்தைத் தணித்த செய்கையைக் காண்கிறோம். இச் செயல் எம்மை மெய் சிலிர்க்க வைக்கிறது. தேவை அறிந்து சேவை புரியும் நற்செயலை எண்ணி வியப்புற வைக்கிறது. அதுமட்டுமில்லாமல் இச் சிறுமி இன, மத, மொழி பேதம் என்பவற்றை ஒரு பொருட்டாகவே எண்ணவில்லை.

இப்படியான பண்புகளை ஒவ்வொருவரும் கடைப்பிடித்தால் பண்பும் அன்பும் இரக்கமும் ஈதலும் கொண்ட நற்பிரஜையாக நாட்டிற்கும் சமுதாயத்திற்கும் உதவலாம். மாணவர்களாகிய நாம் செய்யும் ஒவ்வொரு காரியமும் மற்றவர்களுக்கு நன்மை அளிக்கக்கூடியதாக இருந்தால் நாமும் நமது சுற்றத்தாரும் மகிழ்ச்சியாக இருக்கலாம். அச் சிறுமியின் செய்கை, நாமும் அன்பும் இரக்கமும் சுயநலமற்று உதவி செய்யும் மனப்பாங்கும் உள்ளவர்களாக வாழவேண்டும் என்பதை உணர்த்துகிறது. அச் சிறுமியைப் போல் நாமும் எல்லோருக்கும் உதவி, வாழ்வில் உயர்வு பெறுவோம் என உறுதி எடுப்போம்.

# உங்கள் சிந்தனைக்கு...



நபிகள் நாயகம் ஒரு மாலை வேளையில் நண்பர்கள் சிலருடன் உரையாடிக் கொண்டிருந்தார்.

அப்போது அந்த வழியாக ஓர் ஏழை உழைப்பாளி வந்துகொண்டிருந்தான். அவன் இவரைக் கண்டதும் அருகில் வந்து பணிவாக வணங்கி நின்றான். பதிலுக்கு வணக்கம் செலுத்திய நபிகள் நாயகம் அந்த ஏழை உழைப்பாளியை அருகில் அழைத்தார்.

பின் அவனது கைகளைப் பற்றிக் கண்களில் ஒற்றிக் கொண்டார். அதன்பின் அந்த உழைப்பாளி சிறிது நேரம் உரையாடிவிட்டு நபிகளை வணங்கி விடைபெற்றுச் சென்றான். இந்த நிகழ்ச்சி அங்கிருந்த நண்பர்களுக்கு மிகுந்த ஆச்சரியத்தை அளித்தது. அவர்கள் நபிகள் நாயகத்தைப் பார்த்து, "அந்த மனிதன் மிகச் சாதாரண ஏழை... கூலித் தொழிலாளி. அவனது கைகளை உங்கள் கண்களில் ஒற்றிக்கொண்டீர்களே! எங்களுக்கு ஒன்றுமே புரியவில்லை. என்ன காரணம்?" என்று கேட்டனர்.

அதற்கு நபிகள் நாயகம் தன் நண்பர்களைப் பார்த்து, "ஆம். அவன் மிகச் சாதாரண ஏழை மனிதன்தான். ஆனால் அவன் ஓய்வின்றி உழைப்பதால் அவனது கரங்கள் தழும்பேறிப்போய் உள்ளன. உலகைக் காக்கும் உழைப்பின் சின்னங்களான அந்தக் கரங்கள் புனிதமானவை. அதனால்தான் நான் அவற்றுக்கு மரியாதை செய்தேன்" என்று கூறினார்.

அன்பளிப்பு ரூ. 10.00